நாமக்கல் அரசியல் சமுதாய மாதமிருமுறை இதழ்

# தராசு

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்

https://www.magzter.com/IN/Namakkal-Tharasu/Tharasu/Politics/

8 - 12

₹ 20

15.10.2025



# தவெக - திமுக எதிர்ப்பு அரசியல் எடுபடுமோ?

## பரபரக்கும் தமிழக அரசியல் களம் !

அர்விந்தன்



# விஜயின் திமுக எதிர்ப்பு சட்டமன்ற தேர்தல் கைகொடுக்குமா?

தமிழ்நாடு வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் பிரசாரம் மேற்கொண்டார். நாகப்பட்டினத்தில் பேசிய போது ஆளும் கட்சியான திமுகவை விமர்சித்த விஜய், 'எனது பரப்புரைக்கு விதிக்கும் நிபந்தனைகளை பிரதமர் மோதி அல்லது அமித் ஷாவுக்கு விதிக்க முடியுமா?' என கேள்வி எழுப்பினார்.

அதன் பிறகு, திருவாரூரில் பேசியபோது தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலினைக் குறிப்பிட்டு, "ரொம்ப நாளாக ஓடாமல் இருந்த திருவாரூர் தேரை ஓட வைத்தவர் என மார்தட்டிக்கொண்டவரின் மகன், முதல்வர் ஸ்டாலின், நன்றாக ஓட வேண்டிய தமிழ்நாடு என்னும் தேரை கட்டைபோட்டு ஓடவிடாமல் நிறுத்தியுள்ளார்" என்று கூறினார் விஜய்.

திமுகவை தொடர்ந்து விமர்சித்து பேசுவதன் மூலம், "திமுகவின் எதிரி மற்றும் அதிமுகவுக்கு மாற்று 'தவெக' தான்" என நிறுவ விஜய் முயற்சிப்பதாக அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். அதே சமயம், பெரிய அளவில் வாக்குகளைப் பெற 'திமுக எதிர்ப்பு' என்பதைக் கடந்து விஜய் யோசிக்க வேண்டும் என்ற கருத்தையும் அவர்கள் முன்வைக்கிறார்கள். தவெக தலைவர் விஜய், தனது பரப்புரையின் முதல்கட்டமாக நாகப்பட்டினம் மாவட்டம் புத்தூர் அண்ணா சிலை அருகே மக்களிடம் உரையாற்றினார். அப்போது தனது சுற்றுப்பயணங்கள் ஏன் சனிக்கிழமை திட்டமிடப்பட்டுள்ளது என்பதற்கான விளக்கத்தையும் வழங்கினார்.

"தமிழகத்தில் மீன் ஏற்றுமதியில் 2வது இடத்தில் இருப்பது நாகப்பட்டினம் துறைமுகம். ஆனால், இங்கே மீன் பதப்படுத்தும் நவீன தொழிற்சாலைகள் இல்லை. அதிக குடிசை உள்ள பகுதியும் நாகப்பட்டினமே." என்று பேசினார். "சனிக்கிழமை மட்டுமே ஏன் மக்களை சந்திக்கிறீர்கள் என்கிறார்கள். உங்கள் அனைவரையும் பார்க்கும்போது எந்தவிதமான தொந்தரவும் இருந்துவிடக் கூடாது என்பதாலேயே வார இறுதியில் சந்திப்பது என்று திட்டமிட்டோம். அதேபோல் அரசியலில் சில பேருக்கு ஓய்வு கொடுக்க வேண்டுமல்லவா?. அதற்காகவும் தான் ஓய்வுநாளில் பிரச்சாரம் செய்கிறேன்." என்று கூறினார் விஜய்.

"நாம் செல்கின்ற இடத்தில் எல்லாம் நேரம் உள்பட பல்வேறு கட்டுப்பாடுகளை விதிக்கின்றனர். நான் பேசுவதே 3 நிமிடம் தான். அதிலும் அதை பேசக்கூடாது, இதை பேசக்கூடாது எனக் கூறினால் நான் என்ன தான் பேசுவது. நம் கூட்டத்தில் மின் தடை ஏற்படுகிறது, மைக் வேலை செய்யவில்லை. ஒரு ஆர்.எஸ். எஸ் தலைவரோ, பிரதமர் மோதியோ அல்லது உள்துறை அமைச்சர் அமித் ஷாவோ வருகின்றபோது இந்த மாதிரி பவர் கட் அல்லது வயர் கட் நடக்குமா?. நமக்கு நடப்பதைப் போன்ற கட்டுப்பாடுகளை அவர்களுக்கு விதிப்பார்களா?"

"முதல்வரிடம் நேரடியாகவே கேட்கிறேன், மிரட்டிப் பார்கிறீர்களா? அதற்கு இந்த விஜய் ஆள் இல்லை, எங்கள் இயக்கமும் அதற்கு ஆள் இல்லை. மக்களைச் சந்திக்க ஏன் இத்தனை தடை விதிக்கிறீர்கள்?" என அவர் பேசினார்.

அதேசமயம் மீனவர்கள் பற்றி பேசும்போது மத்திய அரசை விமர்சித்த விஜய், "மற்ற மீனவர்கள் என்றால் இந்திய மீனவர்கள், நமது மீனவர்கள் என்றால் தமிழக மீனவர்கள் எனப் பிரித்துப் பார்த்து பேசும் பாசிச பாஜக அரசு" எனக் கூறினார்.

அதைத் தொடர்ந்து மாலையில் திருவாரூரில் பரப்புரை மேற்கொண்ட தவெக தலைவர் விஜய், "திருவாரூர் சொந்த மாவட்டம் என முதலமைச்சர் பெருமையாக சொல்கிறார். ஆனால் இங்கு திருவாரூர் கருவாடாகக் காய்கிறது. திருவாரூர் மாவட்டத்தை கண்டுகொள்ளவில்லை. உங்களது அப்பா பெயரில் பேனா வைக்க சொல்கிறீர்கள், அனைத்து இடத்திற்கும் அவர் பெயர் வைக்கிறீர்கள். ஆனால், உங்களின் அப்பா பிறந்த திருவாரூர் மாவட்டத்தில் அடிப்படை சாலை வசதி கூட இல்லையே." என்று கூறினார்.

"திருவாரூர் பல்கலைக்கழகத்தில் எல்லாப் படிப்புகளும் இருக்கிறதா? திருவாரூர் மருத்துவக் கல்லூரிக்கே மருத்துவம் பார்க்கிற நிலைமைதான் உள்ளது" என்று கூறினார். நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்ட பரப்புரைகளில் தவெக தலைவர் விஜய் தெரிவித்த கருத்துகள் குறித்து பிபிசி தமிழிடம் பேசிய திமுக செய்தித் தொடர்பாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், "ஒரு பிரச்சாரக் கூட்டத்திற்கு அனுமதி அளிப்பது முதல் கட்டுப்பாடுகள் விதிப்பது வரை என அனைத்தும் காவல்துறையின் கையில் உள்ளது. அதில் தமிழ்நாடு அரசோ அல்லது திமுகவோ ஒருபோதும் தலையிடாது" என்று கூறினார். "கடந்த வருடம் சேலத்தில் திமுகவின் இளைஞரணி மாநாடு நடைபெற்றது. அதற்கான அனுமதி கேட்டு காவல்துறையிடம் சென்றபோது அவர்கள் பல கட்டுப்பாடுகளை விதித்தார்கள். முதலில் நாங்கள் கேட்ட இரண்டு இடங்களிலும் அனுமதி மறுத்துவிட்டு, பிறகு மூன்றாவது முறையாக கேட்கும்போது பெத்தநாயக்கன்பாளையத்தில் நடத்திக்கொள்ள அனுமதி அளித்தார்கள்" என்று கூறுகிறார் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன்.

தொடர்ந்து பேசிய அவர், "சட்டம் ஒழுங்கு விஷயத்தில் காவல்துறையினர் கூறுவதைத் தான் நாம் பின்பற்ற முடியும். ஆளும் கட்சியோ, எதிர்கட்சியோ அல்லது எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி" என்று கூறினார். முதலைச்சர் ஸ்டாலின் மீதான விஜயின் விமர்சனங்கள் குறித்து பேசிய ரவீந்திரன், "அரசியல் முதிர்ச்சியின்றி விஜய் பேசுவதையெல்லாம் நாங்கள் பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை, அதற்கான அவசியமும் இல்லை" என்று கூறினார்.

"தொடர்ந்து திமுகவைக் குறிவைத்து பரப்புரைகளில் பேசுவதன் மூலம், திமுகவின் முதன்மை எதிரி தன்னுடைய கட்சி தான் என்ற பிம்பத்தை உருவாக்க விஜய் முயற்சிக்கிறார்" என்று கூறுகிறார் அரசியல் விமர்சகர். தொடர்ந்து பேசிய அவர், "திமுகவுக்கு எதிரான மனநிலை என்பது தமிழ்நாட்டில் பெரிய அளவில் இல்லை. ஆனால், தனது ரசிகர்களைக் கடந்து, இளைஞர்கள் மற்றும் நடுநிலையாளர்களில் கணிசமானோர் 'ஒரு புதிய தலைவருக்கு வாய்ப்பு அளிக்கலாமே' என்ற எண்ணத்தில் இருப்பார்கள், அவர்களைக் கவரவே தன்னை திமுகவின் எதிரியாகவும், 'திமுக Vs தவெக' என்ற அரசியலை முன்வைத்து, தன்னை அதிமுகவுக்கு மாற்றாகவும் நிறுவ முயல்கிறார்" என்கிறார். மாநிலத்தில் ஆட்சியில் இருக்கும் கட்சி என்பதால் விஜய் திமுகவை தொடர்ந்து விமர்சிப்பது எதிர்பார்த்த ஒன்றுதான், அதில் தவறில்லை எனக் கூறும் பிரியன், "ஆனால், தான் பேசுவதில் இருக்கும் உண்மைத்தன்மையையும் அவர் சரிபார்க்க வேண்டும். திருவாரூர் பல்கலைக்கழகம் குறித்துப் பேசுகிறார், ஆனால் அது மத்திய அரசின் கீழ் வரும் ஒரு பல்கலைக்கழகம். அதையும் திமுகவையும் ஏன் இணைத்துப் பேச வேண்டும்?" என கேள்வி எழுப்புகிறார்.

"திமுக எதிர்ப்பு என்ற யுக்தி, இளைஞர்களிடம் எடுபடலாம். அதைக் கடந்து தமிழ்நாடு முழுவதும் உள்ள மக்களிடம் தாக்கம் ஏற்படுத்த விஜய் விரும்பினால், அதற்கு இந்த யுக்தி நிச்சயம் போதாது" என்கிறார் அரசியல் விமர்சகர் "2021ஆம் ஆண்டின் மாநில தேர்தலில், திமுக கட்சி பெற்ற வெற்றியில் 'பாஜக எதிர்ப்பு' என்ற பிரச்சாரம் முக்கிய பங்கு வகித்தது. இப்போதும் அதையே தொடர்ந்து கடைபிடித்து வருகிறது திமுக, அப்படியிருக்க திமுகவை மட்டுமே அதிகமாக விஜய் விமர்சிப்பது 'அவர் மறைமுக பாஜக ஆதரவாளர்' என்ற கருத்தை வலுவடையச் செய்யும்" என்கிறார் அவர்.

"திமுக எதிர்ப்பு வாக்குகளை குறிவைத்து அரசியல் செய்ய அதிமுகபாஜக, நாம் தமிழர், பாமக ஆகிய கட்சிகளும் முயல்கின்றன. அப்படியிருக்க அவர்களிடமிருந்து தனித்து தெரிய திமுக எதிர்ப்பைக் கடந்து ஒரு அரசியல் பாணியை விஜய் முன்னெடுக்க வேண்டும்." என்று அவர் கூறுகிறார்





# தவெக தொண்டர்கள் அடாவடி நாமக்கல் சதீஷ்யிடம் ஐகோர்ட் கடும் கண்டனம்

தவெக நாமக்கல் மாவட்ட செயலாளர் சதீஷ் குமார் முன் ஜாமின் கோரிய மனுவை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. மேலும் கூட்டத்தில் தவெக கட்சியினர் அடாவடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிலையில் எதுவும் தெரியாது என மாவட்ட செயலாளர் எப்படி கூறலாம்? என்று நீதிபதி கேள்வி எழுப்பினார்.

தவெக தலைவர் விஜய், கடந்த 27 ஆம் தேதி நாமக்கல்லில் பிரச்சாரம் செய்தார். அப்போது நாமக்கல்லில் தனியார் மருத்துவமனை மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இது தொடர்பாக, தவெக நாமக்கல் மாவட்ட செயலாளர் சதீஷ்குமார் மீதும் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த வழக்கில் எந்த நேரத்திலும் கைது செய்யப்படலாம் என்ற சூழ்நிலையில், முன்ஜாமின் கேட்டு சென்னை ஐகோர்ட்டில் சதீஷ் முறையிட்டார். அந்த மனுவில், தாம் எந்த குற்றமும் செய்யவில்லை அரசியல் காரணங்களுக்காக என்னையும் வழக்கில் சேர்த்து விட்டுள்ளனர். சம்பவ இடத்தில் இருந்தேன் என்பதற்காக வழக்கு போட்டுள்ளனர். போலீசார் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு தரவும், கோர்ட் விதிக்கும் நிபந்தனைகளை ஏற்கவும் தயாராக இருக்கிறேன். முன்ஜாமின் வழங்க வேண்டும் என்று கோரியிருந்தார். இந்த மனு இன்று விசாரணைக்கு வந்தது. போலீஸ் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் சந்தோஷ், அனைத்து விதிமுறைகளையும் பின்பற்றுவதாக செய்வதாக கூறி பிரசாரத்துக்கு மனுதாரர் அனுமதி பெற்றார்.

அவரது கட்சியினரின் செயல்பாடுகளால் 5 லட்சம் ரூபாய் அளவுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. பொதுச் சொத்துகளும் நாசப்படுத்தப்பட்டு உள்ளன . இது தொடர்பாக மனுதாரர் மீது மேலும் 8 வழக்குகள் பதியப்பட்டுள்ளது என வாதங்களை வைத்தார்.

மேலும், சம்பவ இடத்தில் எடுக்கப்பட்ட போட்டோக்கள் ஆதாரமாக தாக்கல் செய்யப்பட்டன. இதற்கு தவெக நாமக்கல் மாவட்ட செயலாளர் சதீஷ்குமார் தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. அப்போது குறுக்கிட்ட நீதிபதி செந்தில்குமார், கட்சியினர் அடாவடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிலையில், தமக்கு எதுவும் தெரியாது என்று மனுதாரர் எப்படி சொல்லலாம்? எனக் கேள்வி எழுப்பினார்.

மேலும், கட்சியினரை கட்டுப்படுத்த தெரியாதா? பொறுப்புடன் செயல்பட வேண்டாமா? எனவும் சதீஷ் குமாரை நீதிபதி கேள்வி எழுப்பினார். அத்துடன் அவரது ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். தவெக தலைவர் விஜய் கரூரில் பிரச்சாரம் மேற்கொண்டபோது கடும் கூட்ட நெரிசல் ஏற்பட்டு 41 பேர் பலியாகினர். இந்த விவகாரத்தில், தவெக கரூர் மேற்கு மாவட்ட செயலாளர் மதியழகன், பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், துணைப் பொதுச் செயலாளர் நிர்மல் குமார் உள்ளிட்டோர் மீது காவல் துறையினர் பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்தனர். இதில் மதியழகன் மற்றும் மற்றொரு நிர்வாகி மாசி பவுன்ராஜ் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், புஸ்ஸி ஆனந்த் மற்றும் நிர்மல் குமாரை தனிப்படை போலீசார் தீவிரமாகத் தேடி வருகின்றனர். இதனிடையே முன்ஜாமீன் கோரி புஸ்ஸி ஆனந்த், நிர்மல் குமார் இருவரும் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு இன்று மதுரைக் கிளையில் விசாரணைக்கு வந்தது. தவெக தலைவர் விஜய்யை வழக்கு ஒன்றில் சென்னை உயர்நீதிமன்றம் கடுமையாக சாடியிருந்த நிலையில் புஸ்ஸி ஆனந்த், நிர்மல்குமார் முன்ஜாமீன் மனுக்களை தள்ளுபடி செய்து ஐகோர்ட் கிளை நீதிபதி ஜோதிராமன் உத்தரவிட்டார். புஸ்ஸி ஆனந்த், நிர்மல்குமார் இருவரையும் பிடிக்க 3 தனிப்படைகள் தீவிரமாக தேடி வருகின்றன.



# கரூர் கூட்ட நெரிசல் நடந்தது என்ன?

செப்டெம்பர் 27ம் தேதி கரூரில், த.வெ.க. தலைவர் விஜய் நடத்திய தேர்தல் பிரசாரத்தில் நெரிசல் மரணங்கள் ஏற்பட்டு இன்றுடன் ஒரு வாரம் ஆகிறது. இதில் 11 குழந்தைகள் உட்பட 41 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர்.

இந்த நிலையில் கரூர் கூட்ட நெரிசல் தொடர்பான வழக்கின் விசாரணையில் பல திருப்புமுனைகள் ஏற்பட்டுள்ளன. கடந்த ஒரு வார காலத்தில் நடந்தது என்ன?

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் ஒவ்வொரு வாரம் சனிக்கிழமையும் மாவட்ட வாரியாக பரப்புரை மேற்கொண்டு வருகிறார். அவ்வாறு கடந்த செப்டம்பர் 27ஆம் தேதி சனிக்கிழமை நாமக்கல் மற்றும் கரூர் மாவட்டத்தில் பரப்புரை மேற்கொண்டார். நாமக்கல் மாவட்டத்தில் பரப்புரையை முடித்துவிட்டு இரவு கரூர் சென்றார். அப்போது பரப்புரை நடந்த வேலுசாமிபுரத்தில் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இதில் சம்பவ இடத்திலேயே சிலர் உயிரிழந்த நிலையில் காயமடைந்தவர்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

சம்பவம் நடைபெற்ற சில மணி நேரத்திற்குள் கரூர் சட்டமன்ற உறுப்பினர் வெ.செந்தில்பாலாஜி மற்றும் அதிமுக முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் போன்றோர் மருத்துவமனைக்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்தனர். தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் அன்றைய இரவே கரூர் சென்று பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்தார். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ரூ.10 லட்சமும் காயமடைந்தவர்களுக்கு ரூ.1 லட்சமும் அரசின் சார்பில் நிவாரணம் அறிவிக்கப்பட்டது. கரூர் சம்பவம் தொடர்பாக விசாரித்து பரிந்துரைகளை வழங்க ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒருநபர் ஆணையம் அமைக்கப்பட்டது.

தவெக தலைவர் விஜய் திருச்சி விமான நிலையத்தில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் அளிக்காமலே சென்றது சமூக ஊடகங்களில் விமர்சனத்திற்குள்ளானது. திருச்சியிலிருந்து தனி விமானம் மூலம் சென்னை புறப்பட்டுச் சென்றார் விஜய். இரவு 11 மணிக்கு "இதயம் நொறுங்கிப் போய் இருக்கிறேன்" என உயிரிழப்புகளுக்கு வருத்தம் தெரிவித்து எக்ஸ் தளப் பதிவு ஒன்றை வெளியிட்டிருந்தார்.

சம்பவம் நடந்த அடுத்த நாள் காலை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினும் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமியும் கரூர் சென்று பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சந்தித்தனர். அதன் பிறகு இருவருமே செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

தமிழ்நாட்டில் உள்ள மற்ற அரசியல் கட்சிகளின் தலைவர்களும் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சென்று சந்தித்தனர். மத்திய அரசின் சார்பில் கரூரில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ரூ.2 லட்சமும் காயமடைந்தவர்களுக்கு ரூ.50 ஆயிரமும் நிவாரணம் அறிவிக்கப்பட்டது. விஜய் தனது எக்ஸ் பக்கத்தில் நீளமான பதிவை வெளியிட்டு உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ரூ.20 லட்சமும் காயமடைந்தவர்களுக்கு ரூ.2 லட்சமும் நிவாரணம் வழங்க இருப்பதாக அறிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தவெக சார்பில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி தண்டபாணி இல்லத்தில் முறையீடு செய்யப்பட்டது. வழக்கு அதற்கு அடுத்த நாளான செப்டம்பர் 29ஆம் தேதி உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளதாக தவெக இணை பொதுச் செயலாளர் சிடிஆர் நிர்மல்குமார் தெரிவித்திருந்தார்.

ஸ்டாலின் செய்தியாளர்களைச் சந்தித்தபோது விஜய் கைது செய்யப்படுவாரா என்கிற கேள்வி அவரிடம் முன்வைக்கப்பட்டது. "அரசியல் நோக்கத்தோடு எதையும் சொல்ல நான் விரும்பவில்லை. ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்றார்.

இச்சம்பவத்தை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட அருணா ஜெகதீசன் திருச்சிக்குச் சென்று விசாரணையைத் தொடங்கினார். காவல்துறை சட்டம் ஒழுங்கு கூடுதல் டிஜிபி டேவிட்சன் தேவாசிர்வாதம், கரூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் மின்வாரிய அதிகாரிகளுடன் செய்தியாளர்களைச் சந்தித்து காவல்துறை மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்தார். காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த கவின் என்பவர் உயிரிழந்த நிலையில் பலி எண்ணிக்கை 40 ஆக உயர்ந்தது.

கரூர் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த பாரதிய ஜனதா கட்சி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேமா மாலினி தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. காவல்துறை பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் விஜய் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தது.

அதோடு தவெக தலைவர் சி.டி.ஆர் நிர்மல்குமார், என்.ஆனந்த் மற்றும் கரூர் மேற்கு மாவட்ட செயலாளர் மதியழகன் மீது குற்றம்சாட்டி வழக்குப்பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கில் மதியழகன் காவல்துறையால் கைது செய்யப்பட்டார். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த 61 வயதான சுகுணா என்பவர் உயிரிழந்தைத் தொடர்ந்து பலி எண்ணிக்கை 41 ஆக உயர்ந்தது.

மத்திய அமைச்சர்கள் நிர்மலா சீதாராமன் மற்றும் எல்.முருகன் கரூர் சென்றனர். பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசுகையில், "இனி தமிழகம் மட்டுமன்றி நாடு முழுவதும் இதுபோன்ற நிகழ்வு நடக்கக் கூடாது" என்றார் நிர்மலா சீதாராமன்.

ஸ்டாலின் தனது சமூக ஊடகப் பக்கங்களில் காணொளி ஒன்றை வெளியிட்டிருந்தார். அதில் கரூர் சம்பவம் தொடர்பாக வதந்திகள் பரப்பப்படுவதாகக் குற்றம்சாட்டிய அவர் பொய் செய்திகளைப் பரப்ப வேண்டாம் என்றும் தெரிவித்தார். "எந்த ஒரு அரசியல் கட்சி தலைவரும் தனது தொண்டர்களும், அப்பாவி பொதுமக்களும் உயிரிழப்பதை விரும்ப மாட்டார்கள்." என்றும் தெரிவித்திருந்தார்.

கரூர் சென்று பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்தது பாஜக எம்பிக்கள் குழு, அதன் பிறகு நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் தமிழ்நாடு அரசிடம் 5 கேள்விகளை முன்வைத்தது.

காங்கிரஸ் கட்சியின் சார்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் கே.சி வேணுகோபால், கரூர் எம்பி ஜோதி மணி மற்றும் காங்கிரஸ் நிர்வாகிகள் கரூர் சென்று சிகிச்சை பெற்று வந்த மக்களைச் சந்தித்தனர். கரூர் கூட்ட நெரிசல் வழக்கில் தவெக கரூர் மத்திய மாநகர நிர்வாகி மாசி பவுன்ராஜ் காவல்துறையால் கைது செய்யப்பட்டார். கரூர் சம்பவம் தொடர்பாக வீடியோ வெளியிட்ட விஜய் மற்ற மாவட்டங்களில் பரப்புரையின்போது ஏற்படாத நிகழ்வு கரூரில் மற்றும் எப்படி நடந்தது எனக் கேள்வி எழுப்பியிருந்தார். அந்த வீடியோவில் முதலமைச்சர் ஸ்டாலின் தொடர்பாக விஜய் பேசிய கருத்தும் பேசுபொருளானது. இதனைத் தொடர்ந்து தலைமைச் செயலகத்தில் மூத்த அதிகாரிகள் சார்பில் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது. அப்போது ஏன் கூட்ட நெரிசல் ஏற்பட்டது என்பது தொடர்பாக விவரிக்கப்பட்டது.

கரூர் சம்பவம் பற்றி கருத்து தெரிவிக்காமல் தவிர்த்து வந்த அக்கட்சியின் தேர்தல் பரப்புரை மேலாண்மை பிரிவின் பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா எக்ஸ் தளத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டு உடனடியாக நீக்கினார். ஆனால் அந்தப் பதிவு வன்முறையைத் தூண்டும் விதத்தில் இருந்ததாகக் கூறி சென்னை சைபர் குற்ற காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்தனர்.

# விஜய் மீது நடவடிக்கை தயக்கம் காட்டும் தமிழக அரசு



செப்டெம்பர் 27 நடந்த விஜய் பரப்புரையில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்தனர். “தவெக தலைவர் விஜய் மீது வழக்குப் பதிவு செய்யாமல் இருப்பதன் பின்னணியில் மறைமுக ஒப்பந்தம் உள்ளது என சொல்லலாமா? விஜய் மீது வழக்குப் பதிவு செய்ய வேண்டாம் என அழுத்தம் கொடுத்தது யார்?” என, அடுக்கடுக்காக கேள்விகளை எழுப்பியுள்ளார், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன். திருச்சியில் அக்டோபர் 2 அன்று செய்தியாளர்களிடம் பேசும்போது, கரூர் சம்பவத்தில் தவெக மீதான அரசின் அணுகுமுறையை அவர் விமர்சித்தார்.

“ஆனால், அப்படியெல்லாம் ஓர் அரசாங்கம் நடந்து கொள்ள முடியாது” என தி.மு.க செய்தித் தொடர்புத்துறை தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் கூறுகிறார். கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த விவகாரத்தில் தவெக தலைவர் விஜய் மீது வழக்குப் பதிவு செய்வதற்கு தி.மு.க அரசு பயப்படுகிறதா? விமர்சனம் எழுவது ஏன்?

கரூர் மாவட்டத்தில் கடந்த செப்டெம்பர் 27 அன்று தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் பரப்புரை மேற்கொண்டார். அப்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி குழந்தைகள், பெண்கள் உள்பட 41 பேர் உயிரிழந்தனர்.

இந்த விவகாரத்தில் ஐந்து பிரிவுகளின் கீழ் தவெக கரூர் மாவட்ட செயலாளர் மதியழகன், தவெக பொதுச் செயலாளர் என். ஆனந்த், தவெக இணைப் பொதுச் செயலாளர் சிடிஆர் நிர்மல்குமார் மற்றும் தவெக நிர்வாகிகள் பலர் மீது காவல்துறை வழக்குப்பதிவு செய்துள்ளது. இதில் மதியழகன், நிர்வாகி பவுன்ராஜ் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர் தவெக பொதுச்செயலாளர் என்.ஆனந்த், இணைப் பொதுச்செயலாளர் சி.டி.ஆர்.நிர்மல்குமார் ஆகியோர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. என்.ஆனந்த், சி.டி.ஆர்.நிர்மல்குமார் ஆகியோரின் முன் ஜாமின் மனுவை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை தள்ளுபடி செய்துள்ளது. கூட்ட நெரிசலால் ஏற்பட்ட மரணங்கள் தொடர்பாக விசாரிப்பதற்கு ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஆணையம் ஒன்றை தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது.

“கரூர் சம்பவம் தொடர்பாக விஜய் கைது செய்யப்படுவாரா?” என, முதலமைச்சர் ஸ்டாலினிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியபோது, “ஒரு நபர் ஆணையத்தின் விசாரணை அறிக்கை கிடைத்த பிறகு அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும்“ என்று மட்டும் பதில் அளித்தார். இந்தநிலையில், கரூர் உயிரிழப்புகள் தொடர்பாக தவெக தலைவர் விஜய் மீது நடவடிக்கை எடுப்பதற்கு தமிழ்நாடு அரசு அச்சப்படுகிறதா என்ற கேள்வியை வி.சி.க தலைவர் திருமாவளவன் எழுப்பியுள்ளார்.

திருச்சியில் அக்டோபர் 2 அன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், “கரூர் சம்பவத்தில் அரசு முறையாக இயங்கவில்லை எனக் குற்றம் சுமத்தி அதன் மூலம் அரசியல் செய்வதில் விஜய் குறியாக இருக்கிறார் என்பதைக் காண்பதற்கு அதிர்ச்சியாக உள்ளது” எனக் கூறினார்.

“கரூர் உயிரிழப்புகள் தொடர்பாக துளியும் வருத்தமோ, குற்ற உணர்வோ அவரிடம் இருப்பதாக தெரியவில்லை. ஆட்சியாளர்கள் மீது பழிபோடுவதால் அவர் எவ்வளவு ஆபத்தானவர் அல்லது ஆபத்தானவர்களின் கைகளில் சிக்கியிருக்கிறார் என்பதைக் காணும்போது கவலையளிக்கிறது” எனவும் திருமாவளவன் தெரிவித்தார்.

கரூர் விவகாரத்தில் காவல்துறையின் மெத்தனம் அதிர்ச்சியளிப்பதாகக் கூறிய திருமாவளவன், “அக்கட்சியின் பொதுச்செயலாளர் ஆனந்த் மீது வழக்குப் பதிவு செய்வதற்கு உள்ள முகாந்திரம் விஜய்க்கு இல்லையா?” எனக் கேள்வி எழுப்பினார்.

“தவெகவின் தலைவராக விஜய் இருக்கிறார். நெரிசலுக்கு கூட்டம் கூடுவதில் ஏற்பட்ட குறைபாடுதான் பிரதான காரணமாக உள்ளது. அதிக மக்கள் கூடும்போது எடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளை அக்கட்சி எடுக்கவில்லை” எனக் கூறுகிறார், மூத்த வழக்கறிஞர் கே.எம். விஜயன், “இதனை அரசாங்கம் செய்ய முடியாது” எனக் கூறும் கே.எம்.விஜயன், “ அவரது கட்சியை அவர் தான் கவனிக்க வேண்டும். ஒரு கட்டடம் கட்டும்போது விபத்து ஏற்பட்டால் வீட்டு உரிமையாளர், ஒப்பந்ததாரர் மீதுதான் வழக்குப் போடுவார்கள். அந்தவகையில் கரூர் சம்பவத்துக்கு அக்கட்சியே பொறுப்பாக முடியும்“ என்கிறார். தொடர்ந்து பேசிய கே.எம்.விஜயன், “எந்த இடத்தில் அதிக கூட்டம் கூடினாலும் அங்கு குழப்பம் இருக்கும். அதை சரிசெய்யும் வகையில் ஒருங்கிணைப்பதற்கு கட்சி நிர்வாகிகளுக்கு தெரிந்திருக்க வேண்டும்“ எனக் கூறுகிறார்.

“அவ்வாறு ஒருங்கிணைக்காமல் இருந்திருந்தால் விஜய் மீது வழக்குப் பதிவு செய்யலாம்“ எனவும் குறிப்பிட்டார். “விஜய் மீது தி.மு.க அரசு நடவடிக்கை எடுத்தால் அது அரசியலாக்கப்படும். விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டு அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டால் அது நீதித்துறை சார்ந்து விசாரணை நடந்ததாக பார்க்கப்படும்“ எனக் கூறுகிறார் கே.எம்.விஜயன். “அரசு, அவசரப்பட்டு பழிவாங்கும் நடவடிக்கையை எடுக்கவில்லை என்பதைக் காட்டுவதற்காக அமைதியாக உள்ளனர். இவ்வாறு அரசு கையாள்வது என்பது சாதாரண விஷயம்“ எனவும் அவர் குறிப்பிட்டார். தொடர்ந்து பேசிய கே.எம்.விஜயன், “ஒரு நபரைக் கைது செய்து தேவையற்ற பிரபலத்தைக் கொடுக்காமல் தடுக்கும் வகையில் அரசு செயல்படுவதாகவும் பார்க்கலாம்“ என்கிறார்.

“நடவடிக்கை எடுப்பதற்கு ஆதாரம் இல்லை என்று அர்த்தம் இல்லை. அந்த நடவடிக்கையை கண்ணியத்துடன் எடுக்கப்பட்டதைப் போன்ற கற்பிதத்தை ஏற்படுத்தும் முயற்சியில் அரசு இறங்கியுள்ளதாகவே பார்க்கிறேன்” எனவும் கே.எம்.விஜயன் தெரிவித்தார். ஆனால், “இந்த விவகாரத்தில் விஜய் மீது நடவடிக்கை எடுப்பது சாத்தியமில்லை” எனக் கூறுகிறார், மூத்த வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன். “ஒரு நபர்



ஆணையம் அமைக்கப்பட்டுவிட்டது. ஆணையத்தின் அறிக்கை வரும் வரையில் யார் பொறுப்பு என யாரையும் குறிப்பிட முடியாது. கரூர் விவகாரத்தில் சம்பவம் நடந்த உடன் மாவட்ட ஆட்சியர் மற்றும் போலீஸ் எஸ்.பி மீது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்'' எனக் கூறுகிறார்.

''விஜய் குற்றவாளியா... இல்லையா என்பதைக் கூற முடியாது. அவரின் கூட்டத்துக்கு அனுமதி கொடுக்கும்போதே அந்த இடத்துக்கு எவ்வளவு பேர் வர முடியும் என்பதை உணர்ந்து அனுமதியை மறுத்திருக்கலாம்'' எனவும் அவர் குறிப்பிட்டார். தொடர்ந்து பேசிய ராதாகிருஷ்ணன், ''பரப்புரை நடந்த இடத்துக்கு தாமதமாக விஜய் வந்ததை ஒரு காரணமாக கூற முடியாது. எவ்வளவு கூட்டம் வந்தாலும் அதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு நிர்வாகம் தயாராக இருந்திருக்க வேண்டும். மாவட்டத்தில் பேரிடர் மேலாண்மைத் துறைக்கு ஆட்சியர் தான் தலைவராக இருக்கிறார்'' என்கிறார்.

''குற்றம் சுமத்துவதைவிட இவ்வளவு பெரிய தோல்வி யாரால் ஏற்பட்டது என்பதைப் பார்க்க வேண்டும்'' எனவும் தெரிவித்தார். ''வழக்கில் விஜய் பெயரை சேர்த்தாலும் எடுபடுவதற்கு வாய்ப்பில்லை. கூட்டத்துக்கு வந்தது மட்டும்தான் அவர் செய்த ஒரே வேலை. அதன்பிறகு என்ன நடக்கும் என்பதை மாவட்ட நிர்வாகம் தான் ஊகித்திருக்க வேண்டும். அந்தவகையில் அரசு இயந்திரம் தோல்வியடைந்துவிட்டது'' எனக் கூறுகிறார் ராதாகிருஷ்ணன்.

''இந்த விவகாரத்தில் அரசு நியாயமான அணுகுமுறையுடன் நடந்து கொள்ளவில்லை'' எனக் கூறுகிறார், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச்செயலாளரும் விழுப்புரம் தொகுதி எம்.பியுமான ரவிக்குமார். ''இறப்புகளுக்கு விஜய்தான் பொறுப்பு என்பது தெளிவாக தெரிகிறது. சிலர் இறந்துவிட்டதாக கூறியபோதும் அதைக் காது கொடுத்துக் கேட்காமல் சென்றுவிட்டார்'' எனக் கூறுகிறார்.

முதலமைச்சரை பலவீனமான நபராக காட்டுவதைத்தான் விஜய் விரும்புவதாகக் கூறும் ரவிக்குமார், ''தன்னை அரசுக்கும் மேலானவராக காட்டிக் கொள்ள முற்படுகிறார். அரசு பத்து லட்சம் அறிவித்தால் தான் 20 லட்சம் தரப் போவதாக கூறுகிறார்'' என்கிறார். ''ஆளும் அரசை பலவீனமானதாக தனது பேச்சில் காட்டுகிறார். தி.மு.க ஆட்சியின் அணுகுமுறையும் அதையொட்டியே இருக்கிறது. அவரைப் பார்த்து ஆளும்கட்சி பயப்படுவதாகவே அக்கட்சியின் தொண்டர்கள் பார்ப்பார்கள்'' எனவும் ரவிக்குமார் கூறுகிறார்.

''இது அரசாங்கத்துக்கு பலவீனமானதாக முடியும்'' எனக் கூறும் ரவிக்குமார், '' மாவட்ட நிர்வாகத்துக்கு பொறுப்பு எனக் கூற முடியாது. விஜயைத்தான் பொறுப்பானவராக வழக்கில் கொண்டு வந்திருக்க வேண்டும்'' என்கிறார்.

''தி.மு.க கூட்டணியில் அங்கம் வகிக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி போராட்டம் நடத்தினால் அக்கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் மீது காவல்துறை நடவடிக்கை எடுக்கிறது. கொடிக்கம்பம் அகற்றும் விவகாரத்தில் அதிகம் பாதிக்கப்பட்டது வி.சி.க கொடிக் கம்பங்கள்தான்'' எனவும் ரவிக்குமார் தெரிவித்தார்.

மேலும், ''கூட்டணிக் கட்சிகள் மீது நடவடிக்கை எடுக்கும்போது தயங்காத முதலமைச்சர், 41 பேர் மரணத்துக்குக் காரணமான விஜய் மீது நடவடிக்கை எடுப்பதற்குத் தயங்குவதாகவே பார்க்க முடியும்'' என்கிறார் ரவிக்குமார் எம்.பி. இந்தக் குற்றச்சாட்டுகளை மறுக்கும் தி.மு.க செய்தித் தொடர்புக் குழுத் தலைவரும் முன்னாள் எம்.பியுமான டி.கே.எஸ்.இளங்கோவன், ''விஜயை கைது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் திருமாவளவன் பேசுகிறார். அப்படியெல்லாம் ஓர் அரசாங்கம் நடந்து கொள்ள முடியாது'' எனக் கூறுகிறார்.

''நாங்கள் அரசியல் கட்சியை மட்டும் நடத்தவில்லை. ஓர் அரசாங்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். அரசு நியாயமாக நடந்து கொள்ளும் வகையில் ஓய்வுபெற்ற நீதிபதியைக் கொண்டு ஆணையம் அமைத்துள்ளது. அதன்படி அரசு நடவடிக்கை எடுக்கும்'' என்கிறார். தொடர்ந்து பேசிய டி.கே.எஸ்.இளங்கோவன், '' கரூரில் தவெக பரப்புரை நடந்த அதே இடத்தில் எடப்பாடி பழனிசாமிக்கு அனுமதி கொடுத்துள்ளோம். ஒரு கட்சிக்கு அனுமதி கொடுத்துவிட்டு மற்ற கட்சிக்கு கொடுக்காவிட்டால் அக்கட்சியைப் பார்த்து நாங்கள் பயந்துவிட்டதாக பரப்புவார்கள்'' எனக் கூறுகிறார்.

''கரூர் பரப்புரைக்கு பத்தாயிரம் பேர் கூடுவார்கள் எனக் கூறியதால் அவர்கள் முதலில் கேட்ட இடங்களை மறுத்துவிட்டு வேலுசாமிபுரம் கொடுக்கப்பட்டுள்ளது. இதை அரசியலாக பார்க்க வேண்டியதில்லை'' எனவும் டி.கே. எஸ்.இளங்கோவன் குறிப்பிட்டார்.

கரூர் பரப்புரை தொடர்பாக அனைத்தையும் விசாரித்த பின்னரே காவல்துறை அனுமதி கொடுத்ததாகக் கூறும் டி.கே. எஸ்.இளங்கோவன், ''அங்கு கூடிய கூட்டம் ஜெனரேட்டர் அறையை உடைத்தது. மதியம் வரவேண்டிய தவெக தலைவர் இரவு தான் வந்தார். வெயில் காரணமாகவும் தண்ணீர், உணவு இல்லாமலும் மக்கள் மயக்கம் போட்டு விழுந்தனர்'' என்கிறார்.

'' விசாரணை ஆணையம் என்ன கூறுகிறது என்பதைப் பார்த்துவிட்டுத் தான் நடவடிக்கை எடுக்க முடியும். ஏன் தாமதமாக வந்தார் எனக் கேள்வி எழுப்பி நாங்களாக நடவடிக்கை எடுக்க முடியாது'' எனவும் அவர் தெரிவித்தார்.

தி.மு.கவுக்கும் தவெகவுக்கும் ரகசிய உடன்பாடு ஏற்பட்டுள்ளதாக சந்தேகம் எழுவதாக திருமாவளவன் கூறுவது குறித்துக் கேட்டபோது, '' அதை ஏற்க முடியாது. 'எங்களின் ஒரே எதிரி தி.மு.க தான்' என விஜய் பேசி வருகிறார். அவருடன் நாங்கள் எப்படி அனுசரித்து செல்ல முடியும்?'' எனக் கேள்வி எழுப்புகிறார், டி.கே.எஸ்.இளங்கோவன்.



# தமிழக ஜனநாயக வெற்றிக் கழகம் 30 தொகுதிகளில் வெற்றி பெறுவோம் சிஎம்எஸ் முத்துசாமி தகவல்

தமிழக ஜனநாயக வெற்றிக் கழகம் மற்றும் தமிழ்நாடு (குரும்பா குறுமன்ஸ்) இன முன்னேற்ற சங்கத்தின் செயல்வி ரர்கள் கூட்டம் நாமக்கல்லில் நடந்தது. நிறுவனர் முத்துசாமி தலைமை தாங்கி பேசினார். கட்சியின் மாநில தலைவர் பொன்னுசாமி, மாநில பொதுச்செயலாளர் செல்வம்,சங்கத் தின் மாநில தலைவர் கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்து பேசினர்.

பின்னர் நிருபர்களுக்கு பேட்டி அளித்த நிறுவன தலைவர் முத்துசாமி கூறுகையில், தமிழ்நாட்டில் ஒருதொகுதிக்கு குறைந்தது 40 ஆயிரம் முதல் 60 ஆயிரம் வரை எங்கள் இயக்கத்தை சேர்ந்தவர்கள் உள்ளனர். மாநிலம் முழுவதும் 90 தொகுதிகளில் எங்களுக்கு பெரும் பான்மை இருந்தாலும், சுமார் 30 தொகுதிகளில் தனித்துப் போட்டியிட்டு எங்களால் வெற்றி பெற முடியும். ஆனால் எங்கள் கொள்கைகள் மற்றும் கோரிக்கைகளை ஏற்று கூட்ட ணிக்கு முன்வரும் கட்சியினருடன் தலைமை நிர்வாகிகள் பேச்சுவார்த்தை நடத்தி கூட்டணி குறித்து முடிவு செய்வார்கள். நதிகளை தேசிய மயமாக்கவும், வட இந்திய மற்றும் தென்னிந்திய நதிகளை ஒருங்கிணைத்து அணைகள் மற்றும் கால்வாய்கள் மூலம் விவசாயத்துக்கு தங்கு தடையின்றி தண்ணீர் கிடைக்க தொடர் முயற்சி மேற்கொள்வோம். என்றார். நாமக்கல், சேலம், திருச்சி வடக்கு மாவட்டங்களில் குறும்பர் சமுதாய மக்களே நாமும் நம் பிள்ளைகளும் நன்றாக இருக்க வேண்டும். நாம் தலைநிமிர்ந்து வாழ வேண்டுமென்ற என்ற எண்ணம் ஒவ்வொருவருக்கும் இருக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

அதனால் ஒவ்வொரு ஊரில் இருந்தும் நாமக்கல் நோக்கி வரவேண்டும். நாமக்கல், சேலம், திருச்சி வடக்கு மாவட்டங்களின் செயல் வீரர்கள் கூட்டத்தில் தவறாமல் வந்து கலந்து கொள்ள வேண்டும். என்றும் பொங்கி யெழுந்து புரட்சி படைப்போம். நமக்கென்று ஒரு அரசியல் கட்சி உருவாக்குவோம். அதன் விளைவாக உருவாக்கப்பட்டதுதான் தமிழக ஜனநாயக வெற்றிக் கழகம்.


நாமக்கல் அரசியல் சமுதாய மாதமிருமுறை இதழ்

தராசு

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்

வெளியிடுபவர்
& ஆசிரியர்
கே.ஷண்முகஷ்யாம்

இணை ஆசிரியர்
பூங்குன்றன்

உதவி ஆசிரியர்
இராஜா சத்ரபதி

நிருபர்கள் குழு
ஜெய் பிரசன்னா
சோழன் இராஜராஜன்
அரவிந்தன் பாண்டியன்
அபர்ணா சுபாஷ் தீபக்
நாடியா நிகாத் நிவேதா
ஜெசிக்கா

இதழ் வடிவமைப்பு
கல்யாண்குமார்

புகைப்பட கலைஞர்
பாலு வெங்கடேஷ்

Printed and Published & Owned by K.Shanmugam Printed at Tharasu Printer and Binders from No.5/88, Main Road, Keerambur (Po.), Namakkal (Dt.) - 637 207. Tamilnadu.
Head Office : Chennai
Admin Office : Namakkal
Editor K.Shanmugam Shayam



All Rights Reserved legal jurisdiction Namakkal city Court only. Nothing in tharasu is intended to defame any person but is expressed in Good faith pursuit of truth and public good.

MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY
www.magzter.com

Per Issue Only ₹.20/-

Annual Subscribtion
Only ₹.480/-



Cell : 88078 73200
E-mail : namakkaltharasu@gmail.com
https://www.magzter.com/IN/Namakkal-Tharasu/Tharasu/Politics/



TAMIL NADU | AMERICA | SINGAPORE | ENGLAND | CANDA & AUSTRILIYA

இதழிலில் வெளியாகும் செய்திகள் அனைத்திற்கும் PRB சட்டப்படி ஆசிரியர் குழுவே பொறுப்பு


## தென்னந்தோப்பில் கள்ளுகட்டுவதற்கு பூஜை மாநிலத் தலைவர் வேலுசாமி அபாரம்



நாமக்கல் மாவட்டம் பரமத்தி வட்டாரத்தில் உள்ள விவசாயி நிலத்தில் தென்னந் தோப்பில் கள்ளு கட்டுவதற்கு பூஜை போடப்பட்டது இந்த நிகழ்ச்சியில் உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடுவின் தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் வேலுசாமி தலைமையில் துவக்கி வைக்கப்பட்டது.

SpinoZza









# தங்கம் விற்ற நாதெள்ளா ஜுவல்லரி கடையே காலி

சென்னை தியாகராயநகரை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வந்த நாதெள்ளா சம்பத் ஜுவல்லரி நகைக்கடை நிறுவனம் பாரத ஸ்டேட் வங்கியில் பல கோடி கடன் பெற்று மோசடியில் ஈடுபட்டதாக கடந்த 2018ம் ஆண்டு சி.பி.ஐ. வழக்குப்பதிவு செய்தது. இந்த விவகாரத்தில் சட்டவிரோத பண பரிமாற்றம் நடந்துள்ளதாக கூறி அமலாக்கத்துறை தனியாக ஒரு வழக்கை பதிவு செய்து சொத்துக்களை முடக்கியது. இந்நிலையில் எஸ்பிஐ வழக்கின் பேரில், முடக்கப்பட்ட ரூ.163 கோடி சொத்துகளை வங்கியிடம் அமலாக்கத்துறை ஒப்படைத்தது. சென்னை தியாகராயநகரை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வந்த நாதெள்ளா சம்பத் ஜுவல்லரி பாரத ஸ்டேட் வங்கி உள்ளிட்ட பல்வேறு வங்கிகளில் சுமார் ரூ.250 கோடி முதல் ரூ.380 கோடி வரை கடன் வாங்கியதாக சொல்லப்படுகிறது.

அப்படி கடன் வாங்கிய போது, வங்கிகளுக்கு தவறான நிதிநிலை அறிக்கைகளையும், போலி ஆவணங்களையும் சமர்ப்பித்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. மேலும், கடனுக்கு ஈடாக அடமான வைக்கப்பட்ட சொத்துக்களையும், இருப்புகளையும் சட்டவிரோதமாகப் பயன்படுத்தியதாக கூறப்படுகிறது.

“வங்கியில் வாங்கிய கடனை அந்த நிறுவனம், சேமிப்புத் திட்டங்களில் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு பணத்தைத் திரும்பக் கொடுப்பதற்காகவும், நிறுவனத்தின் அன்றாட செலவுகளுக்காகவும் பயன்படுத்தியாகவும் புகார் எழுந்தது. ஆனால், வங்கிகளுக்குத் தெரியாமல் இந்த நிதி வேறு வழிகளில் பயன்படுத்தப்பட்டதாகவும் புகார் எழுந்தது. இந்த குற்றச்சாட்டுகளை அடுத்து நாதெள்ளா சம்பத் ஜுவல்லரி நிறுவனம் கிளைகளை மூடியது. வாடிக்கையாளர்கள் நகை சீட்டு திட்டங்களில் கட்டிய பின்னர், பணத்தைத் திரும்பப் பெற முடியாமல் அவதிப்பட்டனர். பல கோடிகளில் நடந்த இந்த மோசடி குறித்து கடந்த 2018ம் ஆண்டு சி.பி.ஐ. வழக்குப்பதிவு செய்தது.இந்த விவகாரத்தில் சட்டவிரோத பண பரிமாற்றம் நடந்துள்ளதாக கூறி அமலாக்கத்துறை தனியாக ஒரு வழக்கை பதிவு செய்தது.

இந்த வழக்கில் நாதெள்ளா ஜுவல்லரி நிறுவனத்துக்கு சொந்தமான ரூ.328 கோடி மதிப்பிலான 37 அசையா சொத்துகள் அமலாக்கத்துறையால் முடக்கப்பட்டது. இதுதொடர்பான வழக்கு சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்தநிலையில், எஸ்.பி.ஐ. வங்கி நிர்வாகம் அதே நீதிமன்றத்தில் ஒரு மனுவை தாக்கல் செய்தது. அந்த மனுவில், ‘எஸ்.பி.ஐ. வங்கிக்கு நாதெள்ளா நிறுவனத்தின் மூலம் வரவேண்டிய கடன் தொகை ரூ.163.85 கோடியை பெறும் வகையில் அமலாக்கத்துறை முடக்கம் செய்த அந்நிறுவனத்தின் 37 சொத்துகளில் 27 சொத்துகளை விடுவிக்க அமலாக்கத்துறைக்கு உத்தரவிட வேண்டும்‘ என கோரப்பட்டிருந்தது.

இந்த கோரிக்கையை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. அதன்படி, ரூ.163.85 கோடி மதிப்பிலான நாதெள்ளா நிறுவனத்தின் 27 சொத்துகளை எஸ்.பி.ஐ. வங்கி வசம் ஒப்படைத்துள்ளதாக அமலாக்கத்துறை கூறியுள்ளது.

# தொழில் வர்த்தக மலர் – 2025



REPCO BANK

Grow with us!

Govt. of India Enterprise

## DEPOSITS



- Best yield for deposits.
- Special Rates for Senior Citizens, women and minor children.

## LOAN AGAINST PROPERTY



- **MORTGAGE LOAN**
  For Business and Domestic needs.
- **HOUSING LOAN**
  For Purchase, Construction & Renovation of property.

## JEWEL LOAN



- Competitive Interest Rate.
- Quick Service.
- Available On All Working Days.

For more details visit :

www.repcobank.co.in
Conditions Apply

www.repcobank.com
For Member Customers only






# சேலம் எஸ்.ஆர்.சி. நிறுவனம் தரமான எம் சாண்ட் தயாரிப்பில் முன்னணி

தமிழகத்தின் முதல் எம்.சாண்ட் மற்றும் பி.சாண்ட் உற்பத்தி நிறுவனம் எஸ்.ஆர்.சி., சேலம் எஸ்.ஆர்.சி., நிறுவனம், 17 ஆண்டுகளாக கட்டட கட்டுமான பணிக்கு தேவையான எம்.சாண்ட், பி.சாண்ட் அதிநவீன தொழில் நுட்பத்துடன், தமிழக அரசின் தரசான்றிதழ் பெற்று உற்பத்தி செய்கிறது. கிரஷர் ஜல்லிகள், 6 எம்.எம்., 12 எம்.எம்.,20 எம்.எம்.,40 எம்.எம்., 53 எம்.எம்., மற்றும் சாலை பணிகளுக்கு பயன்படுத்தும் மெட்டீரியல்களான, ஜி.எஸ்.பி.,டபுள்யூ.,

எம்.எம்., ஆகியவை, வி.எஸ்.ஐ., முறையில் தரத்துடன் கிடைக்கிறது. இதுகுறித்து, எஸ்.ஆர்.சி., இயக்குனர் விமலன் கூறியதாவது:

தமிழகத்தில் அதிகரித்து வரும் கட்டட கட்டுமான பணிக்கு, எம்.சாண்ட், பிளாஸ்டரிங் சாண்ட் தேவை அதிகரித் துள்ளது. எம்.சாண்ட் வாங்குவதற்கு முன், வி.எஸ்.ஐ., முறையில் உற்பத்தி செய்யப்படுகிறதா என்ற விழிப்புணர்வு பொதுமக்களிடம் அவசியம் என, தமிழக அரசு வலியுறுத்துகிறது. தரமற்ற முறையில் உற்பத்தி செய்யும் எம்.சாண்ட் வாங்குவதால், நாம் கட்டும் கட்டடத்தின் தன்மை நாள் டைவில் பாழடைவதுடன், பணமும், நேரமும் விரயமாகிறது.

கட்டுமான பணிக்கு, வி.எஸ்.ஐ., முறையில் உற்பத்தி செய்யும் எம்.சாண்ட் மட்டும் கிடைக்கும் நிலையில், அதன் தரம் குறித்து, வாடிக்கையாளர்களுக்கு விழிப்புணர்வு தேவை. எங்கள் தொழிற்சாலையில் உற்பத்தியாகும், எம். சாண்ட், தரக்கட்டுப்பாட்டு பரிசோதனை செய்த பின் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

எஸ்.ஆர்.சி.,எம்.சாண்ட் பி.சாண்ட்க்கு தமிழக அரசின் பொதுப் பணித்துறை தரச்சான்று வழங்கியுள்ளது. சிமெண்ட் பயன்பாடு குறைந்து, பணம் சேமிக்கப்படுகிறது. தகுந்த அளவில் சரியான நேரத்தில் வழங்குவதால், முதன்மை கட்டுமான நிறுவனங்கள், எங்களின் எம்.சாண்ட், பி.சாண்ட்டுக்கு முன்னுரிமை கொடுத்து வாங்குகின்றனர் சேலம் மற்றும் சுற்றியுள்ள பகுதிக்கு தேவை யான எம்.சாண்ட் பனமரத்துப்பட்டி தொழிற் சாலையிலும், சென்னை மாநகர் மற்றும் சுற்றியுள்ள பகுதிக்கு தேவையான எம்.சாண்ட், செய்யாறு இளநீர் குன்றம் தொழிற்சாலையிலும் உற்பத்தி செய்கிறோம்.

எங்களை, சேலம் தலைமை அலுவ லகம் 04272312343, பனமரத்துப்பட்டி97783 40000, 9489555154, 9442700154 ஆகிய எண் களிலும், srcsalem@yahoo.co.in என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

அனைவருக்கும் இனிய ஆயுதபூஜை மற்றும் சரஸ்வதி பூஜை நல்வாழ்த்துக்கள் !

**சுற்றுசூழல் பாதுகாப்போம் !**
**இயற்கைவளம் காப்போம் !!**

R.அசோகன்
தலைவர்

S.லாரன்ஸ்
செயலாளர்

A.ஒபுளிராஜ்
பொருளாளர்

K.தன்ராஜ்
உதவி தலைவர்

N.முருகேசன்
உதவி செயலாளர்

**குமாரபாளையம் சாயப்பட்டறை உரிமையாளர்கள் சங்கம்**
குமாரபாளையம் நாமக்கல் மாவட்டம்


# செய்யும் தொழிலே தெய்வம் !

இயந்திரத்தனமான இந்நாள்களில் தெய்வ வழிபாட்டுக்கு நேரம் ஒதுக்கி வழிபாடுகளை மேற்கொள்ள நம்மில் பலருக்கு நேரமில்லை. தொழில் போட்டிகளும் வர்த்தகப் பரபரப்பும் தொற்றிவிட நிலையில் நிதி சார்ந்த நோக்கமே மேலே நிற்கிறது ஆயினும் ஆண்டுதோறும் ஆயுதபூஜை தினத்தில் ஆண்டுமுழுவதிலுமே தொழில் வர்த்தக நிறுவனங்களில் கோலாகல மன வழிபாடு நடைபெறுகிறது. இதுவே நம் நாட்டில் சிறப்பு.

ஊதுபத்தி முதல் கனரக வாதனங்கள் வரை தயாரிக்கும் அனைத்துத் தொழில் நிறுவனங்களும் இறை வழிபாட்டைத் தழுவியே நடைபெறுகின்றன என்பதே இதன் தாத்பரியம் அதாவது செய்யும் தொழிலே தெய்வம் என்பது பாரதப் பன்பாட்டின் அடிநாதம்

அந்த வகையில் தொழில் சிறந்தோங் கலும், தொழில் மேலும் அபிவிருத்தி அடையவும், ஆகம விதிகளில் சொல்லப்பட்டுள்ள சாரதா நவராத்திரி எனப்படும் இந்த நவராத்திரி



ஆயுதபூஜை வழிபாட்டு முறை புராதன காலந்தொட்டு இந்துகளால் பின்பற்றப்பட்டு வருகிறது தொழில் வளம் பெற அனைத்து தொழில் புரிவோரும் வியாபாரிகளும் அம்மனுக்கு நன்றி செலுத்த வேண்டிய நாளாக ஆயுத பூஜை கொண்டாடப்படுகிறது.

சிறப்பு மிகுந்த நவராத்திரி பூஜையானது. மஹாளய அமாவாசை முடிந்து மறுநாள் முதல் தொடங்கி தசமி திதி வரை 10 நாள்கள் பின்பற்றப்படுகிறது. இந்த 10 நாள்களுக்கும் அம்மனுக்கு ஒவ்வொரு நாளும் ஒரு அவங்காரம் செய்யப்படும் இந்த நவராத்தியில் முக்கிய அம்சமாக இருப்பது வீடுகளில் கொலு அமைப்பது ஆகும் நவராத்திரியின் ஒன்பதாவது நாளை ஆயாபூஜை கொண்டாடப்படுகிறது.

With Best Compliments From

KOVAI
Maruthi
PAPERS AND BOARDS (P) LTD.,

Manufacturers of Quality Kraft Paper

SF 524/1, Irukkur, Kabilarmalai (Po),
P.Velur (Tk), Namakkal (Dt). Pin :637 204
Phone : (04268) 254712, 254715
Mobile : 94423 61715
Fax : (04268) 254718
Website : www.kovaimaruthi.com
E-Mail : kmppaper@gmail.com
info@kovaimaruthi.com

# வாழ்வு தரும் வாழை !

சேலம் மாவட்டம் வாழப்பாடி பகுதியில் பாப்பநாயக்கன்பட்டி கரியக்கோயில் அனை புழுதிக்குட்டை ஆனைமடுவு அணை பாசன வசதி பெறும் கிராமங்களில் மட்டுமின்றி வாழப்பாடி. பெத்தநாயக்கன்பாளையம், அயோத்தியாப்பட்டணம் பகுதிகளில் ஆண்டு முழுவதும் கிணற்றுப்பாசனம் ஆழ்துளைப் பாசன வசதி கொண்ட விளைநிலங்களில் விவசாயிகள் நீண்டகால பலன் தரும் வாழையை சாகுபடி செய்து வருகின்றனர்

நாமக்கல் மாவட்ட எல்லையிலுள்ள சிங்கிலியன்கோம்பை. திம்மநாயக்கன்பட்டி மத்துரூட்டு வேப்பிலைக்குட்டை பஸ்லரமூர்த்திபாளையம் உரம்பு தாண்டகவுண்டன்பாளையம், மங்களபுரம் மெட்டாலா, கொல்லிமலை அடிவாரம், முள்ளுக்குறிச்சி, ஆத்தூரை அடுத்த மல்லியகரை, கோபால் புரம், கீரிப்பட்டி, கடம்பூர் கூடமலை, சீனியம்பட்டிட உயிப்புரம், தம் மம்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் சுமார் 1000 ஹெக்டேர் பரப்பள் வில் வாழை பயிரிடப்பட்டுள்ளது.

வாழப்பாடி சற்றுப்புறக் கிராமங்களில் பூவன், கற்பூரவல்லி, மோசீஸ், மலைவாழை, மொந்தன் ரஸ்தாளி செவ்வாழை பச்சைதா டன் உள்ளிட்ட பல்வேறு வாழைகள் விளைகின்றன.

வாழப்பாடி பேருந்து நிலையம், தலைவாசல் பகுதியில் கூடும் தினசரி காய்கறிச் சந்தைகள், சேலம் ஆத்தூர் உழவர் சந்தைகளுக்கு வாழைத்தார்களைக் கொண்டு சென்று விவசாயிகள் விற்பளை செய்கின்றனர் சேலம், நாமக்கல், கள்ளக்குறிச்சி விழுப்புரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சார்ந்த வியாபாரிகளும் முகவர்களும் வாழைத்தார்களை கொள்முதல் செய்கின்றனர்

வாழப்பாடி பகுதியில் விளைவிக்கப்படும் அனைத்து வாழை ரகங்களுக்கும் ஆண்டு முழுவதும் நல்ல விலை கிடைக்கிறது ஓராண்டுக்கு ஒரு ஏக்கர் வாழைத் தோட்டத்தில் இருந்து ரூ. 2 லட்சம் வரை வருவாய் கிடைப்பதாலும், கடந்த சில ஆண்டுகளாக பருவமழை கைகொடுத்து வருவதால் பாசனத்துக்கு தண்ணீர் தட்டுப்பாடு இல்லாததாலும், வாழப்பாடி வட்டார விவசாயிகள் அதிக அளவில் வாழையை விரும்பும் வாழப்பாடி தனியார் காய்கறிச் சந்தையில் தரம் பிரிக்கப்படும் வாழைத்தார்கள்.

வாழை மரத்தில் இருந்து கிடைக்கும் காய் பழங்கள் மட்டுமின்றி இலை நார் தண்டு ஆகியவற்றுக்கு சந்தையில் நல்ல வரவேற்பு உள்ளதால், விவசாயிக ளுக்கு நல்ல வருவாய் கிடைக்கிறது.


www.christyfoods.in
"QUALITY LEADS US"
Nalaas ACTIVAGE
Nalaas RESULTANT ATTA
Nalaas RICE FLOUR
Nalaas MAIDA
Nalaas BAJJI BONDA MIX
Nalaas WHOLE WHEAT ATTA
Nalaas SAMBA WHEAT BROKEN
Nalaas VITAMIX
Sponsored by :
Christy Quality Foods (I) Pvt. Ltd.
44/1, Bhavani Bypass Road, Chithode, Erode – 638102, Tamil Nadu, India.
Ph: 0424-2533150/51, Fax: 0424-2533141, E-mail: ceo@christyfoods.in
Christy Group of Companies


NSV
SRI VISHNNU JEWELLERRS
Since 1998
Jewellery Beyond Precision
இனிய ஆயுதபூஜை &
தீபாவளி நல்வாழ்த்துக்கள்
Shop Now
Bangles
DIAMOND ❖ GOLD ❖ SILVER ❖ CUSTOMIZED JEWELLRY
Bazaar Street Namakkal - 637 001. Tamilnadu ✆ : 6380 444 946

Regd No.74/89

Ph : 04286 277797
Cell : 94432 62797

நலமுடன்
வாழ
நாளொரு
முட்டை !



முட்டை
ஒரு
சைவ
உணவே !

TNPFA

தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர்கள் சங்கம்
663, சேலம் மெயின்ரோடு, நாமக்கல் - 637 001.

**Tamil Nadu Poultry Farmers Association**

K.சிங்கராஜ்
தலைவர்

K.சுந்தரராஜ்
செயலாளர்

P.இளங்கோ
பொருளாளர்

SHANTHI HOSPITALS

ISO 9001 : 2015

# SHANTHI HOSPITALS

## சாந்தி மருத்துவமனை

60/65, ரங்கர் சன்னதி தெரு, நாமக்கல் - 637001.

Dr. இரா. மாயவன்
M.B.B.S., FCIP., RCGP (UK)

Dr. ந.சிவரஞ்சனி
M.B.B.S.,

Dr. மா.மணிபாரதி
M.B.B.S., M.D.(Radiology)

Dr. ம.சாருதா
M.B.B.S., DMRD

### சிறப்பு சிகிச்சைகள்

- விஷ முறிவு, பாம்பு கடி
- வெறிநாய் கடிக்கு ஊசி போடப்படும்
- இரத்தக்கொதிப்பு, சர்க்கரை நோய்க்கான சிறப்பு சிகிச்சை
- ஆஸ்துமா மற்றும் அலர்ஜி
- பக்கவாதம் மற்றும் வலிப்பு
- சிறுநீரக கோளாறுக்கான சிகிச்சை
- மஞ்சள் காமாலை, கல்லீரல் கோளாறுகள்
- மகப்பேறு வசதி
- மாரடைப்பு, இருதய நோய்





### மருத்துவமனை வசதிகள்

- 24 மணிநேர சேவை
- தீவிர சிகிச்சை பிரிவு
- Digital X-Ray
- ECG
- SCAN
- Hi - Tech Lab
- 24 மணிநேர மருந்தகம்
- Dialysis சிகிச்சை பிரிவு
- நவீன வசதிகள் கொண்ட ஆப்ரேசன் தியேட்டர்.

**Reception : 87547 31840 Mobile : 94432 31840, 94428 96076**



# இயற்கைக்கு உகந்த இனிய பாக்கு தட்டுகள்

சேலம் மாவட்டம், வாழப்பாடி மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் 5000 ஹெக்டேர் பரப்பளவில் நீண்ட காலப் பலன் தரும் கமுகு (பாக்கு) மரங்களை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.

பாக்கு காய்களை அறுவடை செய்து வேகவைத்து பதப்படுத்தி உற்பத்தி செய்ப்படும் ‘ஆப்பி’ என குறிப் பிடப்படும் கொட்டைப் பாக்கு, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் பிற மாநிலங்களில் வாசனைப் பாக்கு தயாரிக்கும் நிறுவனங்களுக்கும் அனுப்பப்படுகிறது.

பாக்குக் காய்கள் மட்டுமின்றி, மரத்தில் இருந்து உதிர்ந்து விழும் பாக்கு மட்டைகளையும் சேகரித்து விவசாயிகள் விற்பனை செய்கின்றனர். இந்தப் பாக்கு மட்டைகளை சேலம், நாமக்கல், ஈரோடு, கோவை மாவட்டத்திலுள்ள சிறுதொழில் முனைவோர் கொள்மு தல் செய்து, பதப்படுத்தி, உணவுத் தட்டுகள் தேநீர்க் கோப்பைகள், பல்வேறு வடிவக் கிண்ணங்கள், தேக்க ரண்டிகள் உள்ளிட்டவற்றைத் தயாரிக்கின்றனர்.

சுற்றுச்சூழலையும், உடல் நலத்தையும் பாதிக்காத இயற்கைப் பாத்திரங்களான இவற்றை விற்பனை செ ய்து வருகின்றனர்.

புவியை மாசுபடுத்தும் நெகிழிப் பொருட்களுக்கு மாற்றாக உற்பத்தி செய்யப்படும் பாக்கு மட்டைப் பாத் திரங்களுக்கு நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது.

வாழப்பாடி பகுதியில் உற்பத்தியாகும் பாக்கு மட்டைத் தட்டு, பாத்திரங்கள், பல நாடுகளில் விருந்து களில் பயன்படுத்தப்படுவது பெருமைக்குரியதாகும்.

கிராமப்புறங்களில் மட்டுமின்றி, நகர்ப்புறங்களிலும் ஏராளமான பட்டதாரி இளைஞர்களும், புதிய தொழில் முனைவோரும் பாக்கு மட்டைத் தட்டு தயாரிக்கும் சிறுதொழிலில் ஆர்வத்தோடு ஈடுபட்டு வருகின்றனர். குறைவான முதலீடு, அருகிலேயே கிடைக்கும் மூலப் பொருள், வங்கிகளில் குறைந்த வட்டியில் கிடைக் கும் கடனுதவி போன்றவற்றால், இத்தொழிலில் ஈடுப டும் தொழில் முனைவோரின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது.



SPB

**TESTED BY TIME**

**AND**

**TRUSTED BY ALL**

எஸ்.பி.பீ. நிறுவனம் 1962 ஆம் ஆண்டிலிருந்து தரமான காகிதங்களை தயாரித்து வருகிறது. தரம் மற்றும் நம்பகத்தன்மை ஆகியவை எங்களது செயல் வார்த்தைகளாக உள்ளன. நாங்கள் தொடர்ந்து சந்தையுடன் தொடர்பில் இருக்கிறோம் மற்றும் தொழில் தரநிலைகளுடன் செயல்பட்டு கொண்டு இருக்கின்றோம்.

உலகளாவிய அளவில் தொடர்ந்து வளர்ந்து வரும் அச்சுத் தொழிலுக்கான தேவைகளை பூர்த்தி செய்ய தொடர்ந்து எங்களை மேம்படுத்துகிறோம்.

எங்களது வாடிக்கையாளர்களின் தளம் 25 நாடுகளுக்கு மேல் பரவியுள்ளது. எங்களது பரந்த அளவிலான தயாரிப்புகளின் மூலம் வாடிக்கையாளர்களின் பல்வேறு தேவைகளை முழுமையான பூர்த்தி செய்கிறோம். எங்களது MF, MG மற்றும் Yankee இயந்திரங்கள் 28 gsm முதல் 250 gsm வரையிலான காகிதம் மற்றும் காகித போர்டுகளை உற்பத்தி செய்கின்றன. தொடர்ந்து தரத்திற்கான அர்ப்பணிப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு. தொழில்சார் சுகாதார பாதுகாப்பு மேலாண்மை அமைப்புகள் மற்றும் பொறுப்பான அர்ப்பணிப்புடன் செய்யும் மூலப்பொருள் கொள்முதல் ஆகிய எங்களது செயல்பாடுகளுக்கு சாட்சி நாங்கள் பெற்றுள்ள ISO 9001, 14001, 45001, 50001 மற்றும் FSC சான்றிதழ்களாகும்.

இந்த டிஜிட்டல் தகவல் தொடர்பு யுகத்தில் எஸ்.பி.பீ. நிறுவனத்தின் உன்னதமான காகித தயாரிப்புகள் தமது நீடித்த பதிவுகளை உருவாக்குகின்றன. தரமான காகிதத்தை சரியான முறையில் உற்பத்தி செய்யும் பொறுப்பான நிறுவனமாக விளங்குவதில் பெருமை கொள்கிறோம்.

**Seshasayee Paper and Boards Limited**
Erode - 638 007. Tamil Nadu,
India Fine Papers - Lasting Impressions

உழவு இல்லையேல் !
இவ்வுலகம் இல்லை !!

உழவன் சிரிப்பில் !
உலகம் செழிக்கட்டும் !!

விவசாயம் தொழில் செழிக்க
அனைவருக்கும் ஆயுதபூஜை நல்வாழ்த்துக்கள்



# இரா.வேலுசாமி

## மாநிலத் தலைவர்

**Cell : 94431 83069**

நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்

உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடுவின்
**தமிழக விவசாயிகள் சங்கம்**

**தலைமை அலுவலகம் :** 28D, முதல் தளம், சின்னுசாமிபிள்ளை காம்ப்ளக்ஸ்,
அருணாசலம் ஆசாரி தெரு & அஞ்சல், சேலம் - 636001.


திராவிட மாடல் அரசின்
4 ஆண்டு சாதனைகள்
மக்களைத் தேடி மருத்துவம்
மகளிர் விடியல் பயணம்
கலைஞர் மகளிர் உரிமைத்தொகை
கலைஞரின் வருமுன் காப்போம்
காலை சிற்றுண்டித் திட்டம்
விவசாயிகளுக்கு 2.50 இலட்சம்
இலவச மின்சார இணைப்பு
புதுமைப் பெண் திட்டம்
தமிழ்ப் புதல்வன் திட்டம்
நான் முதல்வன் திட்டம்
கலைஞரின் கனவு இல்லம்
கலைஞரின் கைவினைத் திட்டம்
முதல்வர் படிப்பகம்
உங்களுடன் ஸ்டாலின்
நலன் காக்கும் ஸ்டாலின்
தாயுமானவர் திட்டம்
கழக
தமிழக முதல்வர்!
தலைவர்
அவர்களின்
நல்லாட்சியில்
வட்டூர் தங்கவேல்
திருச்செங்கோடு வடக்கு ஒன்றிய செயலாளர்
அட்மா குழுத் தலைவர்




ஆயுதபூஜை மற்றும் விஜயதசமி நல்வாழ்த்துக்கள்

மால்கோ வித்யாலயா
மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி

50 YEARS OF ACADEMIC EXCELLENCE

Managed by
Chennai D.A.V. School
மேட்டூர் அணை, சேலம் மாவட்டம்.
போன் : 04298 223638
www.malcovidyalaya.com




vedanta
transforming for good

MALCO VIDYALAYA
MATRIC HIGHER SECONDARY SCHOOL
[ MANAGED BY D.A.V GROUP, CHENNAI ]
Mettur Dam | Salem District | Pin- 636 402 | Ph : 04298 - 223638 | www.malcovidyalaya.com

கல்வியில் பல ஆக்கபூர்வமான செயல் திட்டங்களுக்காக
எமது பள்ளி மற்றும் சென்னை D.A.V. பள்ளிகள்
இடையே ஒப்பந்த புரிந்துணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.


# பசுமைக் குடில் வெள்ளரி சாகுபடியில் அசத்தும் வேளாண் பட்டதாரி

மானாவாரி விவசாயத்தில் நிலக்கடலை, பருத்தி, கம்பு, சோளமும், ஆற்றுப்பாசனத்தில் பழைய ஆயக்கட்டு பகுதியில் மட்டுமே நெல் விவசாயம் நடைபெற்று வந்த பொள்ளாச்சி பகுதியில், ஆழியாறு அணை கட்டப்பட்ட பின்னர் கிடைத்த நீர்வசதியை கொண்டு நீண்டகால பயிரான தென்னைக்கு இப்பகுதி விவசாயிகள் மாறினர். பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் தென்னை சாகுபடி நடைபெற்றதால், பொள்ளாச்சி தென்னை நகரமாக மாறியது. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக, தென்னை சாகுபடி பல்வேறு பாதிப்புகளை சந்தித்து வருகிறது.

முன்பு தேங்காய், கொப்பரை விலை வீழ்ச்சிக்காக போராடிய விவசாயிகள், தற்போது தென்னை மரங்களை காப்பாற்றவே திணறும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். வெள்ளை ஈ தாக்குதல், கூன் வண்டு, கேரளா வாடல் நோய் மற்றும் வறட்சி ஆகியவற்றால் தென்னை விவசாயிகளின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டது. பலர் தென்னை மரங்களை வெட்டி விட்டு மாற்று பயிருக்கு மாறி வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக தென்னை விவசாயத்தில் இருந்து பசுமை குடில் அமைத்து வெள்ளரி சாகுபடியில் ஈடுபட்டு வேளாண் பட்டதாரி ஒருவர் லாபம் ஈட்டி வருகிறார்.

பொள்ளாச்சி அடுத்த பொன்னாயூர் பகுதியை சேர்ந்தவர் அரவிந்த் விஜய் (28) வேளாண் பட்டதாரியான இவர், நோய் தாக்குதலால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை வெட்டி அகற்றி விட்டு அங்கு உயர் தொழில்நுட்ப பசுமைக்குடில் அமைத்து அரசின் மானியத்துடன் வெள்ளரி சாகுபடியில் ஈடுபட்டுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது: கல்லூரி படிப்பு முடிந்ததும் தனியார் வங்கியில் மேலாளர் பணி கிடைத்தது. விவசாயத்தின் மீது இருந்த ஆர்வத்தால் வங்கி பணி வேண்டாம் என விவசாயத்தில் ஈடுபட்டேன். தென்னையில் நோய் தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பாதிக்கப்பட்ட மரங்களை அகற்றி விட்டு அங்கு மாற்று பயிர் சாகுபடி செய்யலாம் என்ற நோக்கத்தோடு, ஒரு ஏக்கரில் பசுமைக் குடில் அமைத்து, வெள்ளரி சாகுபடி செய்து வருகிறேன். ஆண்டுக்கு மூன்று முறை சாகுபடி செய்யலாம். விதை,



ஆள் கூலி, உரம் என ஒரு சாகுபடிக்கு மூன்றரை லட்சம் ரூபாய் செலவாகிறது.

பசுமைக்குடிலில் சாகுபடி செய்யப்பட்ட வெள்ளரி, 120 நாள் பயிராகும். ஒரு செடிக்கு காலை, மாலை, 10 நிமிடம், ஒன்றரை லிட்டர் தண்ணீர் தெளித்தால் போதும். ஒரு ஏக்கருக்கு, ஒரு முறை சாகுபடி செய்யும் போது 50 டன் வரை வெள்ளரி அறுவடை செய்யப்படுகிறது. ஒரு முறை அறுவடைக்கு ரூ. 10 லட்சம் கிடைக்கிறது இதில் முதலீட்டு செலவு ரூ. 4 லட்சம் செலவு போக ரூ.6 லட்சம் லாபம் கிடைக்கிறது. ஆண்டுக்கு மூன்று முறை அறுவடை செய்யலாம்.

கேரளாவில் இருந்து துபாய்க்கு அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. தினமும் 5 டன் வரை தேவை உள்ளது. ஆனால் இப்பகுதியில் போதுமான அளவு வெள்ளரி சாகுபடி இல்லாததால் தேவையை பூர்த்தி செய்ய முடியவில்லை. பசுமை குடில் அமைக்க அரசு மானியம் தருகிறது. இந்த பசுமை குடிலை கோவை மாவட்ட ஆட்சியர் நேரில் பார்வையிட்டு பாராட்டுகளை தெரிவித்தார். இப்பகுதியில் உள்ள வெள்ளரி விவசாயிகள் ஒன்றிணைந்து ஒரு குழுமம் அமைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முயற்சி மேற்கொள்ள அறிவுறுத்தி உள்ளார். அதற்கான பணிகளில் ஈடுபட்டு உள்ளோம். இவ்வாறு தெரிவித்தார்

with best compliments from

# SRC PROJECTS

**INFRASTRUCTURE CONSTRUCTION - SALEM**

**SRC POWER & INFRA LLP - SALEM**

SRC INFRASTRUCTURE BUILDERS
QUALITY RELIABILITY ON TIME




**CRUSHERS AT :**

**SALEM - PANAMARATHUPATTI**
94895 55154, 94427 00154, 98422 76224

**CHENNAI - CHEYYAR**
96888 77999, 99444 11851, 88708 54322

AIAO-BAR ★★★★★ QMS ACCREDITED GCAS

Certificate Under
ISO 9001 : 2015
ISO 14001 : 2015
ISO 45001 : 2018